


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 நூலாசிரியர்களுக்கு நிதியுதவிக்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்திட 10 நாடக மற்றும் நாட்டியக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய உதவியாளராக பணியாற்றி மறைந்த கோ.சண்முகநாதன் அவர்களின் சகோதரர் கோ.கருணாநிதி அவர்களுடைய மகன் க.விஜய் உடல்நலக்குறைவால் மறைவுற்றார். இச்செய்தியறிந்து அவரது இல்லத்துக்குச் சென்று மறைந்த விஜய் அவர்களின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், த. வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., ஆகியோர் உள்ளனர்.

## விகிதாச்சாரம் எந்த அடிப்படையில் அமையும் என்று ஒன்றிய அரசு தெளிவுபடுத்த வேண்டும்!

# பா.ஜ.க. அரசியல் தமிழ்நாட்டிற்கும் மாநில உரிமைகளுக்கும் எதிரானது!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., பேட்டி!

சென்னை, பிப். 28 -

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அதில் விகிதாச்சாரம் எந்த அடிப்படையில் அமையும் என்று ஒன்றிய அரசு தெளிவுப் படுத்த வேண்டும் என்றும் பா.ஜ.க. அரசியல் தமிழ்நாட்டிற்கும் மாநில உரிமைகளுக்கும் எதிரானது என்று தெரிவித்துள்ளார்.

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா எம்.பி. நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

இப்போது விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு தொடர்பாகப் புதியதொரு மசோதா தாக்கல் செய்ய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், மக்கள் தொகை அடிப்படையிலே தொகுதிகள் எண்ணிக்கை மறுசீரமைப்பு செய்யப்படும் என்பதையொட்டி, முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு கடிதம் எழுதியிருந்தார். அதை எல்லோரும் பார்த்திருப்பீர்கள்.

அதில் 1971 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின்படி மறுசீரமைப்பு செய்ய வேண்டிய அவசியம் வந்தபோது, அதற்காக நாடாளுமன்றத்தில் தனி சட்டத் திடுத்தம் இயற்றி, தள்ளி வைத்தது. அப்போது இருந்த ஒன்றிய அரசு மக்கள்தொகைக் கட்டுப்பாடு திட்டத்தை ஊக்குவித்தது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்திய தன் காரணமாக, வடமாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கும் சமமற்ற நிலை நிலவுகின்றது. அதனால் தொகுதி மறுசீரமைப்பு 25 ஆண்டு தள்ளி வைக்கலாம் என்று தள்ளி வைக்கப்பட்டது. அதற்கு பிறகு 2004 ஆம் ஆண்டு வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது அந்த முடிவை ஏற்றுக்கொண்டு, மீண்டும் தள்ளிவைக்கப்பட்டது. மறுசீரமைப்பு என்பது மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே செய்ய முடியாது என்பதை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில்தான் நாடாளுமன்றம் சட்டம் இயற்றி தள்ளி வைத்தது. இதற்கு மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு மறுசீரமைப்பு செய்ய முடியாது என்பதை



நாடாளுமன்ற ஒப்புக் கொண்டதாகத்தான் பொருள் கொள்ள வேண்டும்.

இப்போது அப்படிப்பட்ட எந்த நிபந்தனைகளையும் இல்லாத நேரத்தில், மக்கள்தொகை அடிப்படையில் மட்டுமே தொகுதிகளை மறுசீரமைப்பு செய்தால், மக்கள்தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களை செம்மையாக நிறைவேற்றி இருக்கிற தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்கள் ஜனநாயகரீதியாக தங்களின் பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் இழக்கும் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள், அவ்வாறு நடக்கக் கூடாது என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

1971ல் என்ன நிலைப்பாட்டை எடுத்தோமோ, அதுதான் தொடர வேண்டும் என கடிதம் எழுதியிருக்கிறார். அந்த கடிதத்திற்குப் பதில் அளிக்கிற வகையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பேசுகிற போது விகிதாசார அடிப்படையில்தான் மறுசீரமைப்பு அமையும், அப்படி விகிதாசார அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யும் போது தமிழ்நாட்டிற்கு ஒரு தொகுதி கூட குறையாது என ஹிந்தியில் அறிவித்து இருக்கிறார்.

அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, ஒன்றிய அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் pro-rata என சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த pro-rata என்பது இப்போது இருக்கும் தொகுதிகளின் அடிப்படையில் உயருமா, அல்லது மக்கள் தொகை அடிப்படையில் உயருமா என்பதற்கு, எந்த பதிலும் இல்லை.

அந்த குழப்பத்தைத் தீர்ப்பதாக எண்ணிக் கொண்டு அண்ணாமலை திடீரென நாடாளுமன்றத் தொகுதிகளின் விகித அடிப்படையில் எண்ணிக்கை உயரும் என்று உறுதியாக தெரிவித்து இருக்கிறார். இவ்வாறு உள்துறை அமைச்சர் சொல்லவில்லை; உள்துறை அமைச்சரின் பேச்சுக்கு அண்ணாமலை புதியதாக விளக்கம் கூறியுள்ளார். இந்த கருத்து தவறு.

எனவேதான், மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு தமிழ்நாட்டு மக்கள் உடன்பாடு அல்ல, தமிழக அரசிற்கு ஏற்புடையது அல்ல என்பதை முதலமைச்சர் அவர்கள் தெள்ளதெளிவாகக் கடிதம் எழுதியுள்ளார். அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

எங்களின் எண்ணிக்கைக் குறைய கூடாது என்பது மட்டுமல்ல; நீங்கள் கொண்டு வருகிற எந்தவொரு திட்டத்திலும் எங்களுக்கு அதே எண்ணிக்கையை வைத்துக்கொண்டு வடமாநிலங்களுக்கு மக்கள்தொகை அடிப்படையில் அதிகமாக கொடுத்தாலும், அது அநீதிதான் என்பதில் நாங்கள் மிக தெளிவாக இருக்கிறோம்.

pro-rata என்பது 1971ல் எடுக்கப்பட்ட சென்செஸ் அடிப்படையில் இப்போது இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அப்படியே உயர வேண்டும்.

848 இருக்கைகளை நாடாளுமன்றத்தில் போட்டுள்ளனர், இதில் மக்கள் தொகை அடிப்படை போனீங்கனா எங்கள் எண்ணிக்கை குறையும். pro-rata அடிப்படையில் போனாலும் எண்ணிக்கை குறையும். எனவே 1971ல் என்ன சொன்னார்களோ, அதன் அடிப்படையில் இப்போது இருக்கிற 39 தொகுதி எண்ணிக்கையை pro-rata-வாக எல்லோருக்கும் உயர்த்தினால் எங்களுக்கும் உயர்த்த வேண்டும்.

மக்கள்தொகையை குறைக்க வேண்டும் என சொன்னது ஒன்றிய அரசாங்கம். அதைச் செய்த எங்களுக்கு மட்டும் ஏன் தண்டனை? என்கிற கேள்வி எழுகின்றது. மக்கள் தொகையை கட்டுபடுத்தியிருக்கிறோம். திட்டங்கள் மூலம் முன்னேறி இருக்கிறோம். தமிழ்நாடு முதன்மை மாநிலமாக வந்துள்ளது. இதற்காக நமது பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டால், அது தண்டனை அல்லவா?

தமிழகத்தின் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்துள்ளதால், அதன் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு நடந்தால், நமது குரல் நெறிக்கப்படும். தமிழ்நாட்டிற்கு குறையாது, மற்ற மாநிலங்களுக்கு கூடினால் பிரச்சனை தானே. Pro-rata என்பதும் பிரச்சனை தான்.

புதிய நாடாளுமன்றத்தை திறக்கும்போது இருக்கைகள் 848 அதிகமாக்கப்படும் என தெரிவித்து இருந்தனர்.

தமிழ்நாட்டு உணர்வு எதிரான போக்கு பாஜகவுக்கு இருக்கிறது; ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே இந்தியா என்ற கருத்து தமிழ்நாட்டிற்கும் - மாநிலங்களுக்கும் எதிரான அரசியல் போக்குதான். இவ்வாறான அரசியலை பாஜக வைத்து கொண்டு, நாங்கள் தனியாக இருக்கோம் என்றால் என்ன அர்த்தம். பாஜக, எதனையும் வெளிப்படையாகச் சொல்வதில்லை, அவர்கள் அரசியல் நேர்மையற்றவர்கள். அதனால்தான் பாஜகவை நம்ப முடியாது என்று சொல்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருத்துறைப்பூண்டி இர.செல்வராசன்

பிப்ரவரி 28 (1992)



திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளராகவும் – பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

‘மிசா’விலும் மற்றும் தலைமைக் கழகம் அறிவித்த சட்ட எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

குடந்தை, மகாமக குள மரணங்கள் குறித்து நீதிவிசாரணை கோரி, கழகத்தின் சார்பில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் பங்கேற்றபோது மாரடைப்பால் காலமானார்.

“திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கழகச் சிங்கமாக நடைபோட்டு, அடங்காத ஆர்வத்துடன் பணியாற்றிய தம்பி. சாவு முனையிலும் அந்தத் தம்பி கழகப் பணியே ஆற்றியுள்ளார்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## நெல்லை காவல்கிணற்றில் மாணவ அணியினர் ஆர்ப்பாட்டம்!

நெல்லை, பிப். 28 .

தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பை சிதைக்கும் உள்நோக்கத்துடன் ஆதிக்க இந்தியை திணிக்கும் மற்றும் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்ப்பந்திக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து நெல்லை மாவட்டம் காவல் கிணற்றில் மாணவர் இயக்கங்கள் கூட்டமைப்பு சார்பில் நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் நம்பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,

ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, வி.எஸ்.ஆர். ஜெகதீஸ், பி.சி.ராஜன், ஆரோக்கிய எட்வின், மாணவரணி துணை அமைப்பாளர் சீனிதாஸ், சுற்றுச்சூழல் அணி பரப்பாடி ஞான ராஜ், பணகுடி நகர செயலாளர் தமிழ் வாணன், சமூகை முரளி உள்பட கழகத்தினர் மற்றும் மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மாண்புமிகு கழகத்தலைவர் - முதலமைச்சர் அவர்களின்
72 - வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு
மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பாக நடைபெற உள்ள பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்
மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!
(முதற்கட்ட பட்டியல்)



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க

| தேதி | கழக சொற்பொழிவாளர்கள் | ஒன்றிய, நகர, பேரூர், கழகம் |
|---|---|---|
| 27.02.2025 | திரு.திருச்சி.N.சிவா M.P., | குத்தாலம் கிழக்கு |
| 05.03.2025 | திரு.போடி.காமராஜ் | மயிலாடுதுறை கிழக்கு |
| 06.03.2025 | திரு.ஆடுதுறை.மு.உத்திராபதி | வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் |
| 07.03.2025 | திரு.நாத்திகம்.நாகராஜன் | சீர்காழி கிழக்கு |
| 08.03.2025 | திரு.நாத்திகம்.நாகராஜன் | குத்தாலம் மேற்கு |
| 09.03.2025 | திரு.பசும்பொன்.ரவிச்சந்திரன் | மணல்மேடு பேரூர் |
| 10.03.2025 | திரு.சிவாஜி.கிருஷ்ணமூர்த்தி | மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் |
| 11.03.2025 | திரு.போடி.காமராஜ் | குத்தாலம் பேரூர் |
| 12.03.2025 | திருமதி.புதுக்கோட்டை.விஜயா | கொள்ளிடம் மேற்கு |
| 16.03.2025 | திரு.கரூர்.முரளி | சீர்காழி மேற்கு |
| 21.03.2025 | திரு.சிவாஜி.கிருஷ்ணமூர்த்தி | செம்பை தெற்கு |
| 22.03.2025 | மாண்புமிகு முனைவர்.கோவி.செழியன் | சீர்காழி நகரம் |
| 23.03.2025 | திரு.வழக்கறிஞர்.தமிழன் பிரசன்னா | கொள்ளிடம் கிழக்கு |
| 29.03.2025 | திரு.ச.அ.பெருநற்கிள்ளி | செம்பனார்கோயில் மத்திய |
| 05.04.2025 | மதிவதனி B.Sc.,M.L., | தரங்கை பேரூர் |

குறிப்பு: மேற்கண்ட நிகழ்ச்சிகளை ஒன்றிய, நகர பேரூர் கழக செயலாளர்கள் நிகழ்ச்சிகள் குறித்து கழக நிர்வாகிகள், கழகத்தினர் அனைவரும் முன்கூட்டியே தெரிவித்துப் பொதுகூட்ட நிகழ்ச்சிகளில் கழகத்தினர் அனைவரும் கலந்துகொள்ள செய்து நிகழ்ச்சி சிறப்பாக எழுச்சியுடன் நடத்திட வேண்டும்.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ
செயலாளர்.மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க